செ.வெ.எண் -42 நாள்:23.01.2018

# பத்திரிக்கைச் செய்தி.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் பணிபுரியும் இடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை தடுப்புச் சட்டம் 2013 குறித்த பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (23.01.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி **திருமதி.எம்.டி.சுமதி** அவர்கள் முன்னிலை வகித்து, பேசியதாவது :-

மகளிர் முன்னேற்றத்திற்காக பாடுபடுகிற தேசிய மகளிர் ஆணையம் தன்னுடைய 25வது ஆண்டு நிறைவு விழா (பவளவிழா) 31.01.2018 அன்று கொண்டாடப்பட உள்ளது. இதனையொட்டி, பணிபுரியும் இடத்தில் பெண்களுக்கு பாதுகாப்பிற்காக இயற்றப்பட்ட சட்டமான பணிபுரியும் இடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை தடுப்புச் சட்டம் 2013 குறித்த பயிற்சி வகுப்புகள் இன்று (23.01.2018) நடைபெற்றது.

பணிபுரியும் இடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை குறித்து விசாரிப்பதற்காக மாவட்ட அளவிலான குழு உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் புகார் குழு உறுப்பினர்கள் என பல்வேறு வகையான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு ஏற்படும் பாலியல் தொந்தரவு சம்மந்தமாக புகார்கள் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ மாவட்ட அளவிலான குழுக்களுக்கு அளிக்கலாம்.

இதன் விசாரணை 10 நாட்களுக்கு நடத்தப்படும். பெண்களுக்கு பாதுகாப்பிற்காகவே இதுபோன்ற சட்டங்களை மத்திய, மாநில அரசுகள் இயற்றி செயல்படுத்தி வருகிறது. எனவே, பெண்கள் அனைவரும் போதிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி **திருமதி.எம்.டி.சுமதி** அவர்கள் பேசினார்கள்.

இக்கூட்டத்தில், திட்ட அலுவலர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி, மாவட்ட சமூக நல அலுவலக பாதுகாப்பு அலுவலர் வேலம்மாள், கோட்டாட்சியர்கள் மு.மோகனராஜன் (அரியலூர்), ப.டினாகுமாரி (உடையார்பாளையம்), துணை இயக்குநர் (சுகாதாரத்துறை) ஹேமசந்த்காந்தி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அ.புகழேந்தி, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) அய்யாசாமி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.